DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.33/2024

PW - 8

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர் மோகன்குமார் (Lw -9) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 17.03.2026**

நான் தற்போது சேலம் 3 ரோடு அருகே உள்ள நியூரோ மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 19.11.2023ந் தேதி இரவு 10.55 மணிக்கு மருத்துவமணையில் பணியிலிருந்தேன்.

அப்போது கோபிநாத் என்பவரை அவரது உறவினர் பாஸ்கர் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். கோபிநாத்தை விசாரித்த போது அதே தினத்தில் மாலை 07.00 மணியளவில் முட்டாஞ்செட்டியில் மூன்று தெரிந்த நபர்கள் மரக்கட்டையால் அடித்ததாக கூறினார். முதல் உதவி நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அளிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக எங்களது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார்.

அவரை பரிசோதனை செய்த போது கீழ்கண்ட காயங்கள் இருந்தது. 1. அவருக்கு கீழ் உதடு மற்றும் இடது முட்டிக்கு கீழ் சிராய்ப்பு காயங்கள் இருந்தன. 2. இடது நெற்றியில் 1 cm அளவுள்ள தையல் போடப்பட்ட காயம் இருந்தது. 3. தலையின் பின்புறத்தில் 2cm அளவில் தையல் போடப்பட்ட காயம் இருந்தது. 4. நெற்றியின் இருபுறமும் மற்றும் வலது கண்ணிற்கு மேல் இருக்கும் எலும்புகளில் எலும்பு முறிவு

ஏற்பட்டிருந்தது அதனால் வலது கண்ணை சுற்றி வீக்கம் இருந்தது. மேற்படி கோபிநாத்தை உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். 22.11.2023ம் தேதி கோபிநாத் சிகிச்சை முடிந்து அனுப்பி வைக்கப்பட்டார்.

19.11.2023 முதல் 22.11.2023 வரை கோபிநாத்துக்கு வழங்கப்பட்ட சிகிச்சையின் பேரில் அவருக்கு ஏற்பட்ட காயம் 1 முதல் 3வரையிலான காயங்கள் சாதாரண காயம் என்றும் 4வது காயம் கொடுங்காயம் என்றும் சான்று வழங்கினேன். **(**சேலம் நியூரே பவுண்டேஷன் மருத்துவமனை விபத்து பதிவேட்டு ஆ**.**சா**.**ஆ**.6** ஆகவும்**,** சேலம் நியூரே பவுண்டேஷன் மருத்துவமனை காயச்சான்றிதழ் ஆ**.**சா**.**ஆ**.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

காயம்பட்டதாக சொல்லப்படும் கோபிநாத் சிகிச்சையின்போது சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். கோபிநாத்தை எத்தனை நபர்கள் அடித்ததாக என்னிடம் கூறினார்கள் என்றால் தெரிந்த மூன்று நபர்கள் அடித்ததாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தபோது சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதத்தை காட்டி என்னை விசாரித்தார்களா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. இந்த வழக்கு சம்மந்தமான ஸ்கேன் ரிப்போர், எக்ஸ்ரே ஆகியவற்றை போலிசார் என்னிடம் பெறவில்லை என்றால் சரிதான்.

கோபிநாத் எங்கள் மருத்துவனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் 4 நாட்கள் சிகிச்சை பெற்றார். பொதுவாக ஒரு நபர் குடிபோதையில் தாறுமாறாக சென்று தானாக கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் வாய்ப்பு உள்ளது. வேகமாக சென்று விழும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது. கோபிநாத்துக்கு நிரந்தர சிதைவுகள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**